20th March 1964]

திரு. அ. பெ. தர்மலிங்கம் : முற்காலத்தில் தமிழர்கள் கடல் கடந்து சென்று தங்கள் வாணிபத்தையும், கலாசாரத்தையும் நிலை நாட்டினார்கள் என்று சொல்லப்படுகிறதே, அவர்கள் எந்த மொழியின் தொடர்பு கொண்டு வாழ்ந்தார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வேறு மொழியிலே தொடர்பு இல்லாமல், பாண்டித்தியம் இல்லாமல் தமிழ்மொழியை மட்டும் கொண்டு அவர்கள் பல்வேறு நாடுகளோடு தொடர்பு கொண்டார்கள் என்று நினைப்பது சரியல்ல. காஞ்சி கலாசாலையின் தலைவரை நளாந்தா பல்கலைக்கழகத்திற்கு அழைத்தார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்கள் சம்ஸ்கிருதத்தை நன்கு கற்று பொது மொழியாகக் கொண்டு இருந்தார்கள். திருப்பனந்தாள் மடஸ்தாபகர் ஆதி குமரகுருபரர் தமிழுக்காகச் சிறந்த பல தொண்டு செய்திருக்கிறார்கள் என்றாலும் அவருக்கு சம்ஸ்கிருதமும் தெரியும், இந்தியும் நன்றாகத்தெரியும். கம்பராமாயணத்தை இந்தியிலே வடநாடு சென்று பிரசங்கம் செய்து, அங்குள்ள மன்னனின் அபிமானத்தைப்பெற்று காசியிலே ஒரு மடத்தையே ஸ்தாபித்தார்கள் என்பதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர் :

கல்லாதான் ஒட்பம் கழிய நன்றாயினும்
கொள்ளார் அறிவுடையார்

என்ற வள்ளுவரின் வாக்குக்கேற்ப அறிவு வளர்ச்சி கல்வியையே அடிப்படையாகக் கொண்டது. அந்தக் கல்வியை பல மொழிகளில் பெறுவதற்கு இந்த மாநில மக்கள் பயில்வதற்கு பல்கலைக் கழகத்தில் ஏற்பாடு செய்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் திருக்குறளை நன்றாக உணர்ந்தவர் எனக்கு அவ்வளவு தெரியாது. இன்னும் இரண்டொரு தினங்களில் வள்ளுவர் படத்தை இந்த மன்றத்திலே உபஜனாதிபதி அவர்கள் திறந்து வைக்கிறார்கள். அதைப்போலவே நமக்கும் பரந்த மனப்பான்மை வளரவேண்டும்.

திரு. ஜே. மாதா கவுடர் : உலக மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்றால் போதும் என்றால் கல்லூரிகளில் தமிழ் போதிப்பதை ஊக்குவிப்பது நியாயமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பல மொழிகளைக் கற்றுக்கொள்வது நல்லது. மாணவர்கள் கற்றுக்கொள்ளத் தயங்கவில்லை.

Arrest of workers of the D.M.K. (Corporation election)

* 336 *Q*.—SRI S. MADHAVAN :
SRI RAMA ARANGANNAL : } Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Police arrested D.M.K. Party workers in the Madras City in connection with the Corporation election;

(*b*) the number of persons arrested as on 22nd February 1964 and as on 26th February 1964; and

(*c*) the reasons for the arrest?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) *to* (*c*) Twenty members and sympathisers of the Dravida Munnetra Kazhagam were arrested in Madras City up to 22nd February 1964 and 70

[20th March 1964

(seventy) upto 26th February 1964, in connection with the election to the Corporation of Madras. Some of them were arrested for specific offences and the others under the preventive sections.

திரு. செ. மாதவன் : இவர்களைத் தேர்தலுக்கு முன் தினம் கைது செய்திருக்கிறார்களே, அது அவர்கள் வோட்டுப் போட முடியாதபடி செய்வதாகாதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : வோட்டுப் போடவேண்டுமென்பதற்காக குற்றம் செய்பவர்களை அனுமதிக்கமுடியாது.

திரு. முனு ஆதி : இந்தமாதிரியாகக் குற்றம் செய்யலாம் என்பதற்காகக் கைது செய்யப்பட்டவர்களில் காங்கிரஸ்காரர்கள் எத்தனை பேர் ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : காங்கிரஸ்காரர்கள் சிலபேர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் சில பேர். இவர்கள் மீது வழக்கு போட்டு விசாரணை நடந்தது.

திரு. அ. பெ. தருமலிங்கம் : திடீர் திடீர் என்று கைது செய்யப்பட்டவர்கள் ரௌடி லிஸ்டில் இருந்ததாகச் சொல்லப்படுகிறதே, ரௌடி லிஸ்ட் முன்பே தயாரிக்கப்பட்டதா ? அல்லது இம்மாதிரி கைது செய்யப்பட்டவர்களுக்கு ரௌடி பட்டம் கொடுத்து இருக்கிறார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : புதிதாக லிஸ்ட் இல்லை. லிஸ்ட் இருக்கிறது. புதிதாக யாராவது வந்தாலும் அதில் சேர்க்கப்படுகிறது, அந்த ரௌடிகள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேரலாம். அவர்கள் திராவிடமுன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக பாதுகாப்பு கொடுக்க முடியாது. குறிப்பாக இப்போது கைது செய்யப்பட்டவர்கள் பல செக்ஷன்களின் கீழ் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள். சிலர் சிடி ஆக்ட் 47 செக்ஷன், 14 செக்ஷன், இன்னும் எம். எஸ்ஷி. 75, கிரிமினல் கோட் 55 ஆகிய பிரிவுகளின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. மாதா கவுடர் : சென்றமுறை தேர்தல் காலத்தில் ரௌடித்தனத்தில் இறங்கியவர்களை ரௌடி லிஸ்டில் வைத்து, அந்த அநுபவத்தின் பேரில் இவர்களை முன்கூட்டியே கைது செய்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : முன்பு நடந்த சம்பவங்களைக் கொண்டு, எச்சரிக்கையாக முன்னதாகவே அவசியமான நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டோம். அதன் காரணமாகத் தான் இந்த முறை சென்னை நகர பொது மக்களுக்கு போலீஸார் நல்ல முறையில் பாதுகாப்பு அளித்தார்கள், நல்ல முறையில் தேர்தல் நடந்தது என்று பெரும்பாலோர் பாராட்டுவதையும் நான் கேட்டு இருக்கிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : ரௌடி லிஸ்டில் இருப்பவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிடுகிறார்கள் என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சியிலும் அதிகமான ரௌடிகள் சேர்ந்திருக்கிறார்கள் என்பதை இப்போது கைது செய்யப்பட்டவர்கள் லிஸ்டில் இருந்து புலப்படவில்லையா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : திராவிட முன்னேற்றக் கழகத்தினர்செய்து கொண்ட புகாரின் பேரில் தான் ஒரு சிலர் பேரிலே நடவடிக்கை எடுக்கப்பட்டது. திராவிட முன்னேற்ற கழகத்தில் உள்ள அளவு இதில் இல்லை.

திரு. முனு ஆதி : நான் முன்பு போட்ட கேள்வி கைது செய்யப்பட்டவர்களில் காங்கிரஸ்காரர்கள் எவ்வளவு பேர் என்பது தான்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஒரு சிலர்தான் கைது செய்யப்பட்டார்கள் என்று சொன்னேன்.